RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2432

# Love of life in Bharatiar Poetry

R. Sathish Kumar [a,*], S. Saraswathy [a]

[a] Department of Tamil, Faculty of Science and Humanities, SRM Institute of Science and Technology, Kattankulathur – 603203, Tamil Nadu, India.

*Corresponding author Email: sathishkumarsk7599@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2432

Received: 01-06-2024; Revised: 06-08-2024; Accepted: 14-08-2024; Published: 21-08-2024

**Abstract:** Bharathiyar is known as Mahakavi in the world of poetry. He fought for the country and its people. He has expressed many ideas for the unity and liberation of the people through his works. Such ideas are also based on nature. Plants, birds and animals play a major role in protecting nature. People need to understand the nature of these creatures. In order to make the present day people also understand, Bharathiyar has indicated the virtues and virtues of living beings through his poems. His poems like Pappa Pattu, Kannan Pattu and Kuyil Pattu feature birds like sparrow, crow, hen and cuckoo. Bharathiyar has pointed out the special characteristics of birds by linking them with the characteristics of the people. This article explains what Bharathiyar said from the point of view of preserving them.

**Keywords:** Bharathiyar, Human Life, Pappa Pattu, Kannan Pattu, Mahakavi

# பாரதியார் கவிதைகளில் உயிரின நேயங்கள்

ர. சதீஷ் குமார் [அ *], சு. சரஸ்வதி [அ]

[அ] தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர், தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

கவிதை உலகில் மகாகவி என்று அழைக்கப்படும் சிறப்பிற்குரியவர் பாரதியார். இவர் நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் போராடியவர். இவர் மக்களின் ஒற்றுமைக்காகவும் விடுதலைக்காகவும் தனது படைப்புகளின் மூலம் பல்வகைக் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். அத்தகைய கருத்துகள் இயற்கைச் சார்ந்ததாகவும் அமைந்துள்ளன. இயற்கையைக் காக்கும் பெருங்கடமையைத் தாவரங்களும் பறவைகளும் விலங்குகளும் செய்கின்றன. இத்தகைய உயிரினங்களின் தன்மைகளை மக்கள் உணரவேண்டும். அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்னும் நோக்கில் பாரதியார் குறிப்பிட்டதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இயற்கை

உலகம் சூரியனில் ஏற்பட்ட பிளவின் ஒரு சிறிய பாறைப் போன்ற பகுதியாகும். இது கால மாற்றநிலைக்கேற்ப பாறையில் இருந்து கல்லாகவும் மண்ணாகவும் துகள்களாகவும் என்று படிப்படியாக மாற்றமடைந்துள்ளது. மேலும், இதில் குறிப்பிட்ட காலங்களில் நிலவளங்கள் உருவாகியப் பிறகு நீர்வளங்களும் பல ஆண்டுகளுக்குப் பிறகு மாறியுள்ளன. தொல்காப்பியர்,

“நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”

நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்ற ஐம்பூதங்களை உடையதே உலகம் என்பதை பொருளதிகாரம் மரபியல் கூறுகின்றது (Ilankumaranar & Ilavalagan, 2003).

## பாரதியார் கவிதைகளில் பறவைகள்

சங்க காலத்தில் இருந்தே மக்கள் உயிரினங்கள் மீது பற்று உடையவர்களாக இருந்தனர். இதனைச் சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவனான பேகன் என்ற குறுநில மன்னன் மயிலின் துயரைக் கண்டு போர்வை அளித்த செய்தியும் சிபிசக்கரவர்த்தி என்ற மன்னன் கழுகிடமிருந்து உயிர்பிழைக்க தப்பித்து வந்த பறவையைத் துலாக்கோலில் வைத்து அதன் எடைக்கேற்ப தன் தசையை அறுத்தளித்தவன் போன்ற சிறப்புடையவர்கள் உயிரினங்களின் மீது பற்று உடைவர்களாக இருந்ததை அறியமுடிகின்றது. இத்தன்மையைத் தற்காலத்தில் இருக்கின்ற மக்களும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தனது கவிதைகளின் வழி உயிரினங்களின் மீதுள்ள பண்பையும் சிறப்புகளையும் பாரதியார் குறித்துக்காட்டியுள்ளது அறியமுடிகிறது. இவரது படைப்புகளான பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ஆகிய கவிதைகளில் குருவி, காகம், கோழி, குயில் முதலிய பறவைகள் இடம்பெற்றுள்ளன. பாரதியார் பறவைகளுக்கென்று இருக்கும் தனி சிறப்பியல்புகளை மக்களின் இயல்புகளோடு இணைத்துச் சுட்டியுள்ளார். இதனை மக்கள் அறிவதற்குமுன் குழந்தைகள் அறிவதே சிறந்ததாகும் என்று பாப்பா பாட்டின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

பாப்பா பாட்டு என்பது குழந்தைகளுக்காக படைக்கப்பட்ட படைப்பாகும். அதில் சின்ன சின்ன சிறகுகளை உடைய குருவிகள் போன்று குழந்தைகள் அங்கும் இங்கும் என்று எல்லா நிலத்திலும் வானத்திலும் சுதந்திரமாக சென்று வரவேண்டும் என்பதை,

“சின்னஞ் சிறு குருவி போலே - நீ

திரிந்து பறந்து வா பாப்பா” (பாப்பா பாட்டு 2 :1-2)

என்ற பாப்பா பாட்டின் வரிகள் உறுதிப்படுத்துகிறது. இதனைத் தொடர்ந்து வன்னப் பறவைகளைக் கண்டு மனதில் இருக்கும் குறைகளை அகற்றி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்கிறார் பாரதியார் (Subramaniya Bharathi, 1930).

“வன்னப் பறவைகளைக் கண்டு - நீ

மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா” (பாப்பா பாட்டு 3:3-4)

என்று மனவுறுதிக்குப் பறவையினால் ஏற்படும் முக்கியத்துவத்தை குறிப்பிட்டும் சிறுவயதிலே இருந்தே குறைகளைக் களையப்படுவதற்கு முனைய வேண்டும் என்ற வரிகளின் மூலம் உறுதிபடுத்தியுள்ளார். மேலும், மக்கள் இல்லத்தில் உயிரினங்களை வளர்த்து வருவது வழக்கமான ஒன்றாகும். அதில் பறவை இனங்களில் ஒன்றான கோழியும் உண்டு. மனிதர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுபவர்களாக இருந்துவருபவர்கள். இப்பொழுதும் சில வீடுகளில் கிளி, புறா, கோழி முதலிய பறவைகளை வளர்த்து வருகிறார்கள். இதில் கோழியோடு குழந்தையும் சேர்ந்து விளையாடுங்கள் என்று உயிர்களிடத்து அன்பு காட்ட வேண்டும் என்பதை,

“கொத்தித் திரியு மந்தக் கோழி - அதைக்

கூட்டி விளையாடு பாப்பா” (பாப்பா பாட்டு 3 : 1-2)

என்ற வரிகளின் மூலம் இல்லத்தில் வளர்க்கின்ற உயிரினங்கள் மீது நெருக்கமாக உள்ள உறவை பற்றி பாரதியார் கூறியுள்ளார் (Subramaniya Bharathi, 1930). இதனைத் தொடர்ந்து பறவை இனங்களில் கூட்டத்துடன் உணவை உண்ணும் பறவை காகமாகும். வள்ளுவரும்,

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்

அன்னநீ ரார்க்கே உள" (குறள்.527)

தனது குறளின் மூலம் காகமானது தனக்கு இரைக் கிடைத்தால் அனைவரையும் அழைத்துண்ணும் சிறப்புடைய பறவையாகும் என்று கூறியுள்ளார் (Gowmareeswari, 2003). பாரதியார் காகத்தைத் தனக்குத் தேவையானதைத் திருடிச் செல்லும் பறவையாகும் என்றும் அதனிடம் நாம் இரக்குத்துடன் இருக்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு வலியுறுத்தியதை,

"எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்

கிரக்கப் படவேணும் பாப்பா" (பாப்பா பாட்டு 3:3-4)

என்ற பாப்பா பாட்டின் வரிகள் உறுதிப்படுத்துகிறது. ஆனால், இந்த இடத்தில் தீயவையே செய்தாலும் உயிரினங்களாக இருப்பின் அதன் மீது நாம் இரக்கத்துடன் இருத்தல் சிறப்பானது என்றும் குழந்தைகளும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இப்படைப்பைப் படைத்துள்ளார் (Subramaniya Bharathi, 1930).

பாரதியார் கண்ணன் பாட்டிலும் இயற்கையை வருணித்துள்ளார். அதில் பறவைகளின் சிறப்புகளைக் குறிப்பிட்டிருக்கிறார். பறவைகள் எழுப்பும் சத்தமானது இசை மற்றும் கவிதைகளுக்கு ஒப்பானது என்றும், மனதை ஈர்க்கின்ற இனிமையான நேசக் கவிதைகளைச் சொல்லும் என்பதை,

"நல்ல

நேசக் கவிதைசொலும் பறவை" (கண்ணன் பாட்டு.12, 3:1-2)

என்ற கவிதை வரிகள் உறுதிப்படுத்துகின்றன (Subramaniya Bharathi, 1930). மேலும், குயில் பாட்டில் பறவைக்கென்று சிறந்த இடத்தை அளித்துள்ளார். பறவை இனங்களில் இனிமையான ஓசை எழுப்பக்கூடிய பறவை குயிலாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த குயில் கனவில் தோன்றி எழுப்புகின்ற ஓசையானது இனிமையான பாடலைப் பாடுவதுபோன்று இருக்கிறது என்கிறார் பாரதியார். இதனை,

"நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே - கண்டேன் யான்

கன்னிக் குயிலொன்று காவிடத்தே, பாடியதோர்

இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய்" (குயில் பாட்டு1:24-26)

என்னும் குயில் பாட்டு வரிகள் உறுதிப்படுத்துகின்றன (Subramaniya Bharathi, 1930). இவ்வாறு உலகில் வாழ்கின்ற உயிரினங்கள் மீது அக்கறைக் கொள்ள வேண்டும் என்பதை குருவி, குயில், காகம், கோழி முதலிய பறவைகளின் மூலம் உணர்த்தியுள்ளார்.

## பாரதியார் கவிதைகளில் விலங்குகள்

மனிதர்கள் தங்களது வாழ்வினைத் தக்கவைத்துக்கொள்ள விலங்குகளை வேட்டையாடி உண்டு வாழ்ந்து வந்தனர். அதனால் தான் மக்கள் இறைச்சி உண்ணுதலைத் தவிர்த்தல் என்பது இயலாத ஒன்றாகவே இன்றும் இருந்து வருகிறது. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் இறைச்சி உணவை உண்டாலும் விலங்கு போன்ற உயிர்களின் மீது பற்றுக்கொண்டவர்களாக இருந்தனர். மேலும், அவர்கள் விலங்குகளில் ஆநிரைகளைச் செல்வமாகக் கருதி பாதுகாத்தனர். இதனை,

"ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்" (புறம் 9:1-4)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறே பாரதியார் தனது கவிதைகளில் பசு, நாய், குதிரை, மாடு, ஆடு, சிங்கம், புலி, யானை முதலிய உயிரினங்களையும் சிறப்பித்துக் குறிப்பிடுகிறார் (Puliyur Kesigan, 2010).

தனது படைப்புகளில் ஒன்றான பாப்பா பாட்டில் பசு, நாய் முதலிய உயிரினங்களின் இயல்புகளைக் குழந்தைகளுக்கு அறிவுறுத்துகிறார். பசுவானது தனது இரத்தத்தைப் பாலாக மாற்றி தருகிறது என்றும், அத்தகைய சிறப்பை உடைய பசு நமக்கு நன்மை தருவது என்றும் மேலும், நாயானது மனிதர்களுடன் அன்பாகப் பழகிப் பாதுகாப்பளித்து நன்றியுடன் வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கும் நம் தோழன் என்றும் கூறுகிறார். இதனை

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப்

பசு மிக நல்லதடி பாப்பா

வாலைக் குழைத்து வரும் நாய் தான் - அது

மனிதர்க்குத் தோழ னடி பாப்பா" (பாப்பா பாட்டு 4:1-4)

என்னும் கவிதை வரிகள் மூலம் அறியலாம் (Subramaniya Bharathi, 1930).

மனிதர்களாகிய நாம் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கு உணவு என்பது முக்கியமானதாகும். "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" (புறம்.18:19) அத்தகைய உணவைச் சேகரிப்பதற்கும் தயாரிப்பதற்கும் விலங்குகள் பெரும்பங்கு வகித்துள்ளன (Puliyur Kesigan, 2010). இதனை உணர்ந்த பாரதியார் மக்கள் அனைவரும் உயிரினங்களின் சிறப்பை உணர்ந்தும் பாதுகாப்பிற்கும் வழி வகுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதற்குக் குழந்தைகளிடம் இருந்து இந்த மாற்றத்தை நிகழ்த்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

வண்டியினை இழுக்கும் குதிரையும், உணவிற்காக வயலில் உழுகின்ற தொழிலை மேற்கொள்கின்ற மாடும் நம்மைச் சார்ந்து சுற்றித் திரிந்து வாழும் ஆடு முதலிய உயிரினங்கள் நம் வாழ்வாதாரத்திற்குப் பெரும்பங்கினை அளிக்கின்றன. எனவே இத்தகைய உயிரினங்களை ஆதரிக்க வேண்டியது நம் கடமை என்பதை,

"வண்டி யிழுக்கும் நல்ல குதிரை - நெல்லு

வயலில் உழுது வரும் மாடு

அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை

ஆதரிக்க வேணு மடி பாப்பா"

என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன (Subramaniya Bharathi, 1930). இவ்வாறு பாரதியார் மக்களுக்கும் உயிரினங்களுக்கும் இடையே இருக்கின்ற நெருக்கமான உறவை உணர்த்துகிறார். ஆனால், சிலர் உயிரினங்களை உண்ணக்கூடிய உணவுப்பொருளாக மட்டும் பயன்படுத்தும் இரக்கமற்றவர்களாக மாறிவிடுகின்றனர். இதனைச் சமூகத்தில் இருந்து முறியடிக்க வேண்டும் என்பதற்காகவே பாரதியார் உயிரினங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றால் நமக்கு ஏற்படும் நன்மைகளையும் குழந்தைகளிடம் கூறி இச்சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று முனைந்துள்ளார்.

## உலக உயிர்கள்

உலகத்தில் உள்ள செடி, கொடி, மரம் போன்ற தாவரங்களும் பறவை இனங்களும் விலங்கினங்களும் உயிர் உடையது. தொல்காப்பியர் மரம், செடி போன்ற தாவரங்களை ஓரறிவு உயிர்கள் என்கிறார். "புல்லும் மரனும் ஓரறி வினவே" (தொல். பொருள். மரபு. நூற். 572). சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் உணவிற்குக் காரணமாக அமையும் நெல், நீர் ஆகியவைக்கு உயிர் இருக்கின்றது என்பதை அறிந்திருந்தனர். இதனை,

"நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே" (புறம்.186:1)

என்ற புறநானூற்றுப் பாடல் வரி உறுதிப்படுத்துகிறது (Puliyur Kesigan, 2010). வள்ளுவரும் மழையானது மக்களுக்குத் தேவையானவற்றை உருவாக்க பயன்படுவது மட்டுமல்லாமல் தானும் உணவாக மாறுகின்ற சிறப்பை உடையது என்கிறார். இதனை

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉ மழை" (குறள்.12)

என்ற குறளடி உணர்த்துகிறது (Subramaniya Bharathi, 1930). இவ்வாறு காலமாற்றத்திற்கேற்ப மக்கள் உயிர்களிடத்து நெருக்கமாக வாழ்ந்தாலும் சிலர் அதற்கு முரண்பாடாக இருந்துவருகின்றனர். இவ்வுலகில் அதனை மாற்ற வேண்டும் என்பதற்காக பாரதியார் தனது கவிதைகளின் மூலம் உயிரினங்களின் இயல்புகளையும் அவற்றிடம் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் உணர்த்துகிறார். இத்தன்மையை உலக மக்கள் அனைவரும் உணர்ந்து நடத்தல் வேண்டும்.

## முடிவுரை

உலகம் பல்வேறு வகையான உயிரினங்களைக் கொண்டுள்ளது. அவ்வுயிரினங்களில் மனித இனமே ஆறறிவு பெற்று அறிவுத்திறன் மிகுந்தவர்களாக விளங்குகின்றனர். அவ்வறிவினைக் கொண்டு மக்கள் அனைவரும் இனி வரும் காலங்களில் உயிரினங்களை அழிவிலிருந்து காக்க தன்னாலான உதவிகளைச் செய்து இவ்வுலகில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய நிலையையே பாரதியாரும் விரும்புகின்றார்.

## References

Bharathiar (2007) Bharathiar Kavithaigal, Poompuhar Pathippagam, Chennai, India

Gowmareeswari, S. (2003) Thirukural Parimelalagar Urai, Saratha Pathippagam, Chennai, India

Ilankumaranar, R., Ilavalagan, K. (2003) Tholkapiyam Porulathikaram, Tamilmann Pathippagam, Chennai, India

Ilankumaranar, R., Tamilannal, Annamalai S., (2022) Purananuru Moolamum Uraiyum, Varthaman Pathipagam, Chennai, India

Puliyur Kesigan, (2010) Purananuru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

Subramaniya Bharathi, (1930) Puthiya Athichudu, Pappa Pattu, Murasu, Bhrathi Arupatharu, Bharathi Presuralayam, Chennai, India

**Conflict of interest**

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author(s) 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

R. Sathish Kumar, S. Saraswathy, Love of life in Bharatiar poetry, Indian Journal of Tamil, 5(3), (2024) 6-11. https://doi.org/10.54392/ijot2432